**தலைப்பு 250 – அரச கணக்குகள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன அரச கணக்குகள் திணைக்களத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வில் நோக்கெல்லை

---

தலைப்பு 250 – அரச கணக்குகள் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூலை 23 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக அரச கணக்குகள் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை | | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் | | | |
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | 1. மிகை ஏற்பாடுகள் | 2.3 |
| | | 2. எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலன்களை பெற்றுக்கொள்ளாமை. | 2.1 |
| 128(1)(ஈ) | பெறுகை, கொடுப்பனவு மற்றும் விநியோகம் என்பவற்றிற்காக போதியளவு உள்ளக சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம்முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதெனவும் | வணிக ரீதியற்ற முற்பணக் கணக்குகளின் குறைபாடுகள் | 2.5(11) |

| | | | | |
|---|---|---|---|---|
| 128(1)(ஏ) | நிலுவையாகக் காணப்பட்ட கட்டணங்கள் முதலியவற்றை அறவீடு செய்வதற்கு விசேட ஒழுங்கு விதிகளைப் பயன்படுத்துவதற்கு மற்றும் அந்த நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணம் தொடர்பாக அவற்றினை அறவீடு செய்வதனைத் துரிதப்படுத்துவதற்கு எடுக்கப்படுகின்ற முயற்சிகள் தொடர்பாக ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது ஏனைய தரப்பினர்களால் பணிக்கப்பட்டவாறு தமக்கு அறிக்கையிடுதல் | 1. | அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளில் வருமதியாக உள்ள கடன் மீதிகளை அறவிடப்படாமை | 2.4 |
| | | 2. | வணிக ரீதியற்ற முற்பணக் கணக்குகளின் கடன் மீதிகளை அறவிடாமை | 2.5(1) |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவம்வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

அரச கணக்கீட்டுத் திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டின் நடைமுறைத் திட்டத்தின் பிரகாரம் ITMIS செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உதவுவதன் மூலமாக தற்காலத்திற்குரிய அறிக்கைப்படுத்தும் கட்டமைப்பொன்று நிர்மாணித்தல் எதிர்பார்க்கப்பட்ட இலக்காக இருந்தாலும், அந்த செயற்திட்டம் 2018 ஆகஸ்ட் 13 ஆந் திகதியாகியும் நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்ததுடன் அந்த இலக்கை அடைவதற்கு முடியாதிருந்தது.

### 2.2 பெறுகை நடைமுறையின் ஊடாக வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்

அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 1.77 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 1.65 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்தில் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 2013 | மீண்டுவருபவை | 35.22 | 31.31 | 3.91 | 11 |
| | மூலதனம் | 12.56 | 12.27 | 0.30 | 02 |
| | மொத்தம் | **47.78** | **43.58** | **4.21** | **09** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2014 | மீண்டுவருபவை | 30.24 | 30.21 | 0.03 | 0.1 |
| | மூலதனம் | 3.1 | 1.82 | 1.28 | 41 |
| | மொத்தம் | **33.34** | **32.03** | **1.31** | **04** |
| 2015 | மீண்டுவருபவை | 36.15 | 35.69 | 0.46 | 01 |
| | மூலதனம் | 9.2 | 5.66 | 3.54 | 38 |
| | மொத்தம் | **45.35** | **41.35** | **4.01** | **09** |
| 2016 | மீண்டுவருபவை | 41.6 | 41.21 | 0.39 | 01 |
| | மூலதனம் | 1.7 | 1.48 | 0.22 | 13 |
| | மொத்தம் | **43.3** | **42.69** | **0.61** | **01** |
| 2017 | மீண்டுவருபவை | 44.23 | 42.90 | 1.33 | 03 |
| | மூலதனம் | 3.88 | 1.75 | 2.13 | 55 |
| | மொத்தம் | **48.11** | **44.65** | **3.46** | **07** |

மீளாய்வாண்டு சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மிகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல்**

செலவு விடயம் 06 க்காக மொத்தம் ரூபா 4.89 மில்லியன் மிகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையினால் அப்படியென்றால் அந்த செலவு விடயங்களுக்கு உரிய ஏற்பாடுகளின் மொத்தம் ரூபா 2.55 மில்லியன் மட்டும் பயன்படுத்தப்பட்டதனால் சேமிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாட்டுகளின் 28 சதவீதம் தொடக்கம் 89 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டிருந்தது.

## 2.4 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு - 2017

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 25001 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| **செலவினம்** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளவாறானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளவாறானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளவாறானது** |
| **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** |
| 4.00 | 3.39 | 1.50 | 1.83 | 14.00 | 9.18 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

**வருமதியாக உள்ள கடன் மீதிகைள அறவிடாமை**

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்தினத்தில் இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்ட வேண்டிய வருமதியாக உள்ள கடன் மீதிகளின் மொத்தம் இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை தவிர்த்து ரூபா 297,799 ஆக இருந்ததுடன் 04 வருடம் தொடக்கம் 08 வருடங்கள் வரையான வீச்சில் மிகையான காலப்பகுதிக்கு அந்த வருமதியான மீதிகள் தொடர்ந்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த வருமதியாகவுள்ளக கடன் மீதிகளினை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

**2.5 வணிகரீதியற்ற முற்பணக் கணக்குகள் - 2017**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய கீழ் விபரிக்கப்பட்டுள்ள ஏனைய அரசுகளுக்கான கொடுப்பனவுகளுக்கான அனுமதிக்கப்பட்ட முற்பணக் கணக்குகள் (25002) மற்றும் நானாவித முற்பணக் கணக்குகள் (25003) போன்ற வணிக ரீதியற்ற முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 25002 | 4.00 | 3.24 | 2.00 | 3.04 | 3.00 | 0.78 |
| 25003 | 10.00 | - | 2.50 | 50.89 | 350.00 | 173.60 |

இது சம்பந்தமாக கீழ்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**வருமதியாக உள்ள கடன் மீதிகளை அறவிடாமை**

விடய இலக்கம் 25003 நானாவித முற்பணக் கணக்குகளின் கீழ் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்தினத்தில் அறவிட வேண்டிய வருமதியாக உள்ள மீதிகளின் மொத்தம் ரூபா 173.14 ஆக இருந்ததுடன் 07 வருடங்களுக்கு அதிகமான காலமாக வருமதியாக உள்ள கடன் மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(i) நானாவித முற்பணக் கணக்குகளின் கீழ் 2017 ஆம் ஆண்டின் ரூபா 3.42 மில்லியன் முற்பணங்கள் மாத்திரம் பணமாக தீர்க்கப்பட்டதுடன் அது வருடத்தின் ஆரம்ப மீதியின் 1.5 சதவீதமாகக் காணப்பட்டது.

(ii) நெல் கொள்வனவிற்காக பொலன்னறுவை மாவட்ட செயலக காரியாலயத்திற்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட முற்பணங்களில் ரூபா 47.47 மில்லியன் மீண்டும் அறவிடுவதற்கு முடியாத முற்பணமாக 2017 ஆம் ஆண்டிலே புத்தகங்களிலே பதிவழிக்கப்பட்டிருந்ததுடன், அது வருடத்திற்குள் உள்ள பெறுவனவாக காணப்பட்ட ரூபா 50.89 மில்லியனான முழு செலவின் 93 சதவீதமாகும்.

## 2.6 கட்டுநிதிக் கணக்கு - 2017

மீளாய்வாண்டிலே திட்டமிடப்பட்டிருந்த கட்டுநிதி, விண்ணப்பித்த கட்டுநிதி மற்றும் பெறப்பட்டிருந்த கட்டுநிதி முறையே ரூபா 196.07 மில்லியன் ரூபா 286.56 மில்லியன் மற்றும் ரூபா 277.93 மில்லியன் ஆகும். இதன்படி வருடத்திற்குள் திட்டமிடப்பட்ட கட்டுநிதிக்கு நிகராக 46 சதவீதம் மேலதிகமாக விண்ணப்பிக்கப்பட்டிருந்ததுடன் விண்ணப்பித்திருந்த கட்டுநிதியின் 97 சதவீதம் பெறப்பட்டிருந்தது.

## 2.7 மனித வளங்கள் முகாமைத்துவம்

**இணைப்புச் செய்யப்பட்டுள்ள பதவியணி, உள்ளபடியான பதவியணி, மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

திணைக்களத்திற்கு பணிப்பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட உள்ளபடியான மற்றும் வெற்றிட பதவியணயினர் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் ஆளணி வேதனங்களுக்கான செலவின தொகுதிக்காக ரூபா 34.15 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன்பிரகாரம் நபரொருவருக்கான வருடாந்த ஆளணி வேதனங்களுக்கான செலவினம் ரூபா 656,686 ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 16 | 12 | 04 |
| (ii) | இரண்டாம் மட்டம் | 03 | 02 | 01 |
| (iii) | மூன்றாம் மட்டம் | 35 | 29 | 06 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 12 | 09 | 03 |
| | **மொத்தம்** | 66 | 52 | 14 |

2018 திசெம்பர் 13 ஆந் திகதியாகும் போது சிரேஷ்ட நிலையான 04 பதவிகள் உட்பட முழு வெற்றிடங்களின் எண்ணிக்கை 08 ஆக இருந்ததுடன் இவ்வாறான வெற்றிடங்கள் காணப்படுதல் திணைக்களத்தின் செயலாற்றலுக்கு இடையூறான முறையில் பாதிப்புக்குள்ளானால் அதை நிரப்புதல் அல்லது அப்படியில்லாவிட்டால் பதவியணியினரை திருத்தம் செய்வதன் அவசியத்தன்மை அவதானிக்கப்பட்டது.